(2020) 3 எஸ்சிஆர் 697

ஆத்ம ராம்

–எதிர்–

சரன்ஜித் சிங்

(சிறப்பு அனுமதி மனு (சி) எண் 27598/2016)

2020 பிப்ரவரி 10

(மாண்புமிகு நீதியரசர் திரு. என்.வி. ரமணா

மற்றும்

மாண்புமிகு நீதியரசர் திரு. வி. ராமசுப்ரமணியன்)

உரிமையியல் நடைமுறைச் சட்டம், 1908 – கட்டளை VI பிரிவு 149, விதி 17 – 1994 இல் மேற்கொண்ட ஒப்பந்தத்தின் கீழ் மனுதாரருக்கு அசையா சொத்தை விற்க எதிர்மேல்முறையீட்டாளர் ஒப்புக்கொண்டுள்ளார் – முன்பணம் செலுத்தப்பட்டுள்ளது – ஏற்றதை ஆற்றுகை நிர்ணயிக்கப்பட்ட நாள் (7.10.1996) வந்த போது, மனுதாரர் 1996 இல் அதனைக் கோரி சட்ட அறிவிப்பு அனுப்பியபோது, விற்பனைப் பத்திரம் எழுதிக்கொடுக்க, மூன்றாம் நபருடன் உள்ள சில உரிமையியல் வழக்குகள் நிலுவையில் இருப்பது தடையாய் உள்ளது குறித்து எதிர்மனதாரர் தெரிவித்துள்ளார் – வலியுறுத்துக் கட்டளைக்காக 1999 இல் மனுதாரர் வழக்கு தாக்கல் செய்துள்ளார் – விற்பனை ஒப்பந்தத்தை ஏற்றதை ஆற்ற வலியுறுத்துவதற்கு அந்த வழக்கு செல்லத்தக்கதல்ல என்ற காரணத்தால் அதனை தள்ளுபடி செய்ய எதிர்மனுதாரர் கோரினார் – அந்த தொழிற்நுட்ப ஆட்சேபணையை சரிசெய்ய தேவையான நீதிமன்றக்

கட்டணத்தை செலுத்த மனுதாரருக்கு விசாரணை நீதிமன்றம் உத்தரவிட்டுள்ளது – மனுதாரர் குறைந்துபோன நீதிமன்றக் கட்டணைத்தைச் செலுத்தியுள்ளார் – அந்த வழக்கில் விசாரணை நீதிமன்றம் தீர்ப்பாணை வழங்கியுள்ளது – முதல் மேல்முறையீடு நீதிமன்றத்தால் நிலைமாற்றப்பட்டது – உயர் நீதிமன்றத்தால் உறுதி செய்யப்பட்டது – முடிவு உரிமை வழக்கு, ஏற்றதை ஆற்றுகை என்பதற்கான ஒன்று என்றால், ஒப்பந்தத்தில் குறிப்பிட்டிருந்த விற்பனைத் தொகையின் அடிப்படையில் உரிமை வழக்கினை குறைந்தபட்சம் மனுதாரர் மதிப்பிட்டிருக்கவேண்டும் – ஆனால் அவர் செய்யவில்லை – உரிமை வழக்கு வலியுறுத்துக் கட்டளைக்காக மட்டுமே என்றால் (உள்ளபடியே அதுதான்) மனுதாரருக்கு உள்ள ஒரே வழி, கட்டளை VI , விதி 17 இன் கீழ் திருத்தம் கோருவது மட்டுமே – அவ்விதம் ஒரு மனு தாக்கல் செய்யப்பட்டிருந்தால் அது காலவரம்பு காரணமாக தள்ளுபடி செய்யப்பட்டிருக்கவேண்டும் அல்லது ஏற்றுக்கொண்டிருந்தாலும்கூ, ஏற்றதை ஆற்றுகைக்கான வேண்டுரை திருத்தம் மூலம் சேர்க்கப்பட்டது ஒரு விடயமாக அமையாது. வழக்குரையின் தேதி தொடர்பாக மீள எடுத்துக்கொள்ளப்படும் – எனவே, அவ்வாராக வழக்குரையை வைத்துக்கொள்ள மனுதாரரால் காணப்பட்ட குறுகிய வழியாகும், ஆனால் குறைவு கட்டணம் செலுத்த அனுமதிக் கோரி, இருந்தபோதிலும் முதலில் என்ன உரிமை வழக்கு ஏற்றதை ஆற்ற தாக்கல் செய்யப்பட்டது – 1963, சட்டம் பிரிவு 20 இன் கீழ் ஏற்றதை ஆற்றுகை நிவாரணம் விருப்புரிமையாதலால்,

அத்தகைய நிச்சமற்ற அணுகுமுறை குறிப்பாக ஏற்றதை ஆற்றக் கோரும் வழக்கில் அனுமதிக்கப்படக்கூடாது – விசாரணை நீதிமன்றம் தவறான வாதத்தால் ஏற்றதை ஆற்றுகை வழக்காகக் கருத தேர்ந்தெடுத்துள்ளது மற்றும் குறைவுடைய நீதிமன்றக் கட்டணத்தினை செலுத்த மனுதாரரை அனுமதித்துள்ளது – அசல் குறைபாது சரிசெய்யப்பட்டபோதும் மற்றும் அது குறுதி நிலையை அடைந்தும் காலவரம்பு காரணத்தினால், மனுதாரருக்கு பொருந்தாது என்ற உயர் நீதிமன்றத்தின் அணுகுமுறை, பிழையானதாக இருக்கலாம் – ஆனால், அவர் வழக்கினை (ஒப்பந்தத்தின் கீழ் நிர்ணயிக்கப்பட்ட நாளிலிருந்து மூன்று ஆண்டுகள் கடந்த பின்னர்) வலியுறுத்துக் கட்டளைக்காக மட்டும் தாக்கல் செய்து, அவ்வாறு அதனை மதிப்பிட்டு மற்றும் அதன்படி நீதிமன்றக் கட்டணம் செலுத்தியபோது குறிப்பாக அதன் சாதகத்தை பிரிவு 149 இன் கீழ் வாய்ப்பாக எடுத்துக்கொள்ள மனுதாரர் அனுமதிக்கப்படக்கூடாது, ஆனால், வழக்கினை தள்ளுபடி செய்வதற்காக ஒரு மனுவுடன் எதிர்த்துநிற்கின்ற நிலைக்குப்பின் முறையான நீதிமன்றக் கட்டணம் கட்ட தேர்ந்தெடுத்துள்ளார் – விசாரணை நீதிமன்றதால் வழங்கப்பட்ட ஏற்றதை ஆற்றும் தீர்ப்பாணையை முதலாம் மேல்முறையீடு நீதிமன்றம் சரியாக மாற்றியமைத்துள்ளது – அதனை உயர் நீதிமன்றம் உறுதி செய்தது சரியானது – குறித்த வகைப் பரிகாரச் சட்டம் 1963 – பிரிவு 16(சி), 20.

சிறப்பு அனுமதி மனுவைத் தள்ளுபடி செய்து, நீதிமன்றம்,

முடிவு : 1.1. ஆவணத்தின் மீது உள்ளபடியே செலுத்தவேண்டிய முழுமையான அல்லது பகுதியான நீதிமன்றக் கட்டணத்தை எந்த நிலையிலும் ஒரு நபர் செலுத்துவதை அனுமதிக்க உ.வி.மு.ச., பிரிவு 149 நீதிமன்றத்திற்கு விருப்புரிமை வழங்கியுள்ளது என்பது உண்மைதான். எனினம் அது செலுத்தப்பட வில்லை. மேற்சொன்ன முடிவின்படி அத்தகைய விருப்புரிமை மற்றும் நீதிமன்றக் கட்டணம் செலுத்துதலை ஒருமுறை நீதிமன்றம் அதிகாரத்தை செலுத்திவிட்டால், பிரிவு 149 இன் கீழ், ஆவணம், அத்தகைய கட்டணம் முதலிலேயே செலுத்தப்பட்ட அதே வலிமையும் விளைவையும் கொண்டிருக்கும். இவ்வழக்கின் காலவரையறை மட்டுமே வினாக்குரியதல்ல. நாங்கள் ஏற்கெனவே தெரிவித்தவாறு, வழக்கு விற்பனை ஒப்பந்தத்திற்கான நாள் 12.10.1994. மனுதாரரின் கருத்துப்படி, ஒப்ப்ந்தத்தின் கீழ் கடமையை செயல்படுத்துவதற்கான கடைசி நாள் 7.10.1996. மனுதாரரால் 12.11.1996 அன்று சட்ட அறிவிப்பு வழங்கப்பட்டது. ஆனால், வழக்கு 13.10.1999 அன்றுதான்

தாக்கல் செய்யப்பட்டது, அது ஒப்பந்தத்தை நிறைவேற்ற விற்பனை ஒப்பந்தத்தின் கீழ் நிர்ணயிக்கப்பட்ட நாளான 7.10.1996 இலிருந்து மூன்றாண்டுகள் கழித்து உள்ளது (வழக்கு 03.10.1999 இல் தாக்கல் செய்யப்பட்டது என எங்கள் முன் மனதாரர் கோரினாலும், விசாரணை நீதிமன்றத்தின் தீர்ப்புரை அது போல் தீர்ப்பாணை 13.10.1999 தான் தாக்கல் செய்யப்பட்ட நாள் எனக் குறிப்பிடுகிறது). அது ஆரம்பத்தில் வைக்கப்பட்டவாறே, வாதுரையில் கோரப்பட்ட நிவாரணமானது மீதமுள்ள விற்பனைத் தொகையை எதிர்மனுதாரர் பெற்றுக்கொள்ள வலியுறுத்துக் கட்டளை மற்றும் மனுதாரருக்குச் சாதகமாக மாறுதல் செய்து ஆவணம் பெறுவதுதான். மனுதாரர் / வாதி எவரால் கோரப்பட்ட நிவாரணத்தின் தன்மையை உள்ளபடியே அறிவார். இதனால் தான் வழக்கில் கோரப்பட்ட நிவாரணத்தை ரூ.250/– என மதிப்பிட்டு நிர்ணயிக்கப்பட்ட நீதிமன்றக் கட்டணம் ரூ.25/–ஐ செலுத்தியுள்ளார். அது தாக்கல் செய்யப்பட்ட படிவத்தில் வழக்கு நிலைக்கத்தக்கதுதானா என அவரது எழுத்து மூல வாக்குமூலத்தில் எதிர்மனுதாரர் ஆட்சேபனை எழுப்பியுள்ளார். எனவே, பிரச்சினை 5 ஆக, தற்போதைய படிவத்தில் வழக்கு நிலைக்கத்தக்கதல்லவா என்கிற பிரச்சினையை விசாரணை நீதிமன்றம் எழுப்பியுள்ளது. 12.10.2002

பிரச்சினைகள் எழுப்பப்பட்ட பின்ன விசாரணை நீதிமன்றம் எதிர்மனுதாரர் வழக்குத் தள்ளுபடிக்காக தாக்கல் செய்த மனுவை விசாரணைக்கு எடுத்துக்கொண்டது. அம்மனுவில், ஏற்றதை ஆற்றுக என்பதற்கான ஒன்றாக கருதி, குறைவாகயுள்ள நீதிமன்றக் கட்டணத்தை மனுதாரர் வாதியை செலுத்த அனுமதித்ததில் 9.8.2003 தேதியிட்ட உத்தரவை விசாரணை நீதிமன்றம் வழங்கியுள்ளது. விற்பனை ஒப்பந்தத்தை ஏற்றதை ஆற்றுகை என மறைமுகமாக மனுதாரர் கோரமுடியுமா என்ற பிரச்சினையை தீர்க்காமல், வலியுத்துக்கட்டளை என நிவாணத்தை மறைத்தும், வலியுறுத்துக் கட்டளைக்காக வழக்கில் செலுத்தவேண்டிய நிர்ணயிக்கப்பட்ட நீதிமன்றக் கட்டணத்தை செலுத்தியும், நீதிமன்றம் தவறான வாதத்தால் ஏற்றதை ஆற்றுக என்பதற்கான வழக்காகக் கருத தேர்ந்தெடுத்து, மனுதாரர் குறைவான நீதிமன்றக் கட்டணம் செலுத்த அனுமதித்தது. அந்த வழக்கு ஏற்றதை ஆற்றுகை என்பதற்கான ஒன்று என்றால், ஒப்பந்தத்தில் கூறப்பட்ட விற்பனைத் தொகையின் அடிப்படையிலாவது குறைந்தபட்சம் வழக்கினை மனுதாரர் மதிப்பிட்டிருக்கவேண்டும் . ஆனால் அவர் செய்யவில்லை. அந்த வழக்கு வலியுறுத்துக் கட்டளைக்கு மட்டுமே என்றால் (அது

உள்ளபடியே அதுவானது) மனுதாரருக்கு உள்ள ஒரே வழி உரிமையியல் விசாரணைமுறைச் சட்டத்தின் கட்டளை VI விதி 17 இன் கீழ் திருத்தம் கோருவதேயாகும். அத்தகைய மனு தாக்கல் செய்யப்பட்டிருந்தால், அது காலவரையறையினால் தள்ளுபடி செய்யப்பட்டிருக்கும் (கே. ரஹேஜா கன்ஸ்ட்ரக்ஷன்ஸ் லிமிடெட் – எதிர்– அலையன்ஸ் மினிஸ்ட்ரீஸ், 1995 சப்ளி 1(3) எஸ்சிசி 17) அல்லது அது அனுமதிக்கப்பட்டிருந்தாலும்கூட, திருத்தம் மூலம் நுழைக்கப்பட்ட வேண்டுதலான ஏற்றதை ஆற்றுகை என்பதற்கு, வாதுரையின் நாள்வரை பின்னால் ஒரு விஷயமாக எடுக்கப்பட்டிருக்காது (திர்லோக் சிங் –எதிர்– விஜய குமார் 1996 (8) எஸ்சிசி 367) , வான் விபாக் கரம்சாரி க்ருஹா நிர்மான் சகாரி சன்ஸ்தா மார்யாதித் –எதிர்– ரமேஷ் சந்தர் 2010 (14) எஸ்சிசி 596). எனவே, அவ்வாறாக வாதுரையைத் தக்கவைக்க மனுதாரர் / வாதியால் காணப்பட்ட ஒரு சுருக்கு வழியாகும். ஆனால், ஏற்றதை ஆற்றுக என்பதற்காகத்தான் முதலில் உள்ளபடியே தாக்கல் செய்யப்பட்டிருப்பதால், குறைவான நீதிமன்றக் கடடணத்தை செலுத்த அனுமதி கோரப்பட்டுள்ளது. குறித்தவகை பரிகாரச் சட்டம், 1963 பிரிவு 20 இன் கீழ் ஏற்றதை ஆற்றுகை என்கிற நிவாரணம்

விருப்புரிமையாக இருப்பதால் ஏற்றதை ஆற்றுக என்பதற்கு குறிப்பாக வழக்கில் அத்தகைய சந்தேகமான அணுகுமுறை அனுமதிக்கப்பட்டிருக்கக்கூடாது. (பத்தி 5–7)

கே. ரஹேஜா கண்ஸ்ட்ரக்ஷன்ஸ் லிமிடெட் –எதிர்– அலையன்ஸ் மினிஸ்ட்ரீஸ் (1995) சப்ளி 3 எஸ்சிசி 17 (1995) 3 எஸ்சிஆர் 960 தர்லோக் சிங் –எதிர்– விஜய் குமார் (1996) 8 எஸ்சிசி 367 (1996) 3 எஸ்சிஆர் 879 வான் விபாக் கரம்சாரி கிரிஹா நிர்மான் சஹகாரி சன்ஸ்தா மார்யாதித் –எதிர்– ரமேஷ் சந்தர் (2010)14 எஸ்சிசி 596 (2010) 12 எஸ்சிஆர் 1045 – குறித்துக்காட்டப்பட்டது.

1.2. காலவரையறையின் காரணமாக மனுதாரர் / வாதிக்குப் பொருத்தமற்று இருக்கும்போது, அசல் குறைபாட்டை சரி செய்யப்பட்டபோதிலும் , அது இறுதியாக்கப்பட்டுள்ளபோது, உயர் நீதிமன்ற அணுகுமுறை தவறாக இருக்கலாம் என்பது உண்மையாக இருக்கலாம். ஆனால் அவர் குறிப்பாக வலியுறுத்துக் கட்டளைக்காக மட்டும் வழக்கை (விற்பனை ஒப்பந்தத்தின் கீழ் நிர்ணயிக்கப்பட்ட நாளிலிருந்து மூன்றாண்டுகளுக்கு மேல்) தக்கல் செய்து, அவ்வாறாக அதனை மதிப்பிட்டு, அதன்படி நீதிமன்றக் கட்டணம் செலுத்தி, வழக்கு தள்ளுபடி செய்வதற்கான விண்ணப்பம்

எதிர்க்கப்பட்டதன்பேரில் கட்டணம் செலுத்த நினைத்து, உ.வி.மு.ச., பிரிவு 149 இன் படி தன்னை பாதுகாத்துக்கொள்ள மனுதாரர் மேல்கொள்ளும் சாதகமாக சூழ்நிலையை நாங்கள் அனுமதிக்க மாட்டோம். புத்திசாலித்தனம் எப்போதும் பயன் தராது. பிரிவு 16(இ)ஐ சூழ்ந்திருக்கும் இரண்டாவது அம்சத்தை பரிசீலிக்கையில், விசாரணை நீதிமன்றத்தின் தீர்ப்புரையைப் பார்த்தோமென்றால், குறித்தவகை பரிகாரச் சட்டம் பிரிவு 16(இ)–இன் வரையறைகளின்படி மனுதாரர் / வாதி தரப்பில் தயார் நிலை மற்றும் விருப்பநிலையை குறித்த வினா தொடர்பாக பிரச்சினை எதுவும் எழுப்பப்படவில்லை என்பதைக் காட்டுகிறது. 12.11.96 தேதியிட்ட சட்ட அறிவிப்பு வெளியிட மனுதாரர் தேர்ந்தெடுத்த விடையமும், நடவடிக்கையும் முடிக்கும் காரணத்திற்காக, அதன் செயல்பாடுக்காக குறிப்பிடப்பட்ட காலத்திற்குள் சார்பதிவாளர் முன்பு 7.10.1996 அன்று அவர் இருந்ததைக் காட்டுவதற்காக ஒரு உறுதி ஆவண வடிவில் (சான்றாவணம் பி 2 எனக் குறியிடப் பெற்றது) மனுதாரர் உருவாக்கிய விடையமும் வாதுரை தாக்கல் செய்தபோது 13.10.1999 அன்று மூன்றாண்டுகள் கழிந்த பின்னரும் மனுதாரர் தயாராகவும், விருப்பமுடையவராகவும் இருந்தார் என முடிவு செய்ய போதுமானதாக

இல்லை. 12.11.1996 இல் சட்ட அறிவிப்பு வழங்கப்பட்ட பின்னர் வழக்கு தாக்கல் செய்ய (13.10.1999 அன்று) நீண்டகால தாமதமான மூன்றாண்டுகளுக்கு மனுதாரரிடமிருந்து எந்த விளக்கமும் வரவில்லை. ஏற்றதை ஆற்றுகை வழக்கில் வாதியின் நடவடிக்கை முக்கியமானதாகும். 12.11.1996 இல் சட்ட அறிவிப்பு வழங்கிய நபர், தயார் நிலையையும் விருப்பமும் கோரிய நிலையில் ஆனால் 13.10.1999 அன்று தான் வழக்கை பதிவு செய்துள்ளது, மேற்சொன்ன நிவாரணத்திற்கான தொடர்புடைய நிர்ணயிக்கப்பட்ட நீதிமன்றக் கட்டணத்தை உடைய வலியுறுத்துக் கட்டளைக்காக அதுவும் வேண்டுதல் வைப்பது ஏற்றதை ஆற்றுகைக்கான விருப்புரிமை நிவாரணத்திற்கு உரியதல்ல. முதல் மேல்முறையீடு நீதிமன்றம், விசாரணை நீதிமன்றத்தால் வழங்கப்பட்ட குறித்தவகை நிறைவேற்றுகைக்கான தீர்ப்பாணையை எதிர்மறையாக்கியது சரியே, மேலும் முதல் மேல்முறையீட்டு நீதிமன்றத்தின் தீர்ப்புரையை உயர் நீதிமன்றம் உறுதி செய்தது சரியே என்பது எங்களது ஆழ்ந்தாராய்ந்த கருத்து. (பத்தி 8–10)

பார்வையிடப்பட்ட தீர்முடிவுகள்

1. (1995) 3 எஸ்சிஆர் 960...குறித்துக்காட்டப்பட்டது.. பத்தி 7

2. (1996) 3 எஸ்சிஆர் 879...குறித்துக்காட்டப்பட்டது.. பத்தி 7

3. (2010) 12 எஸ்சிஆர் 1045...குறித்துக்காட்டப்பட்டது.. பத்தி 7

உரிமையியல் மேல்முறையீட்டு அதிகாரவரம்பு: சிறப்பு அனுமதி மனு (உரிமையியல்) எண் 27598/2016.

சண்டிகாரிலுள்ள பஞ்சாப் மற்றும் உறரியானா உயர் நீதிமன்றம் ஆர் எஸ் ஏ எண் 1244/ 2013 இல் 20.5.2016 தேதியிட்ட தீர்ப்புரை மற்றும் உத்தரவிலிருந்து எழுகிறது.

வழக்குரைஞர்கள்:

திரு. பசந்த ஆர், மூத்த வழக்குரைஞர்

திரு. சமர் விஜய் சிங் .... மேல்முறையீட்டாளருக்காக

திரு. சௌமன் தாலுக்தார்

திரூ. ஆர்டி. ராத்தோர்,

திரு. வரிந்தர் குமார் ஷர்மா ... எதிர்மேல்முறையீட்டாளருக்காக

<u>தீர்ப்புரை</u>

மாண்புமிகு நீதியரசர் திரு. வி. ராமசுப்பிரமணியன் அவர்கள்:

1. ஒரு அசையாச் சொத்தை வாங்குவதற்காக ஒப்பந்தம் வைத்துள்ளவரின் வலியுறுத்துக் கட்டளைக்கான வழக்கில் (ஏற்றதை ஆற்றுகை என்பதற்கான வழக்காக விசாரணை நீதிமன்றம் கருதியது) விசாரணை நீதிமன்றத்தால் தீர்ப்பாணை வழங்கப்பட்டுள்ளது, ஆனால் அந்த தீர்ப்பாணை முதல் மேல்முறையீடு நீதிமன்றத்தால் மாற்றப்பட்டு மற்றும் இரண்டாம் மேல்முறையீட்டில் உயர் நீதிமன்றத்தால் உறுதிசெய்யப்பட்டு தற்போது சிறப்பு அனுமதி மனுவாக தாக்கல் செய்யப்பட்டுள்ளது.

2. மனுதாரர் சார்பாக ஆஜரான கற்றறிந்த முதுநிலை வழக்குரைஞர் திரு.ஆர்.பசந்த் மற்றும் எதிர்மனுதாரர் சார்பாக ஆஜரான கற்றறிந்த வழக்குரைஞர் திரு. சௌமன் தாலுக்தார் ஆகியோரின் வாதங்களை நாங்கள் கேட்டோம்.

3. சிறப்பு அனுமதி மனுவினை முடிவு செய்ய அவசியமான சங்கதிகளின் கருக்கம் பின்வருமாறு:

i) 12.09.1994 அன்று மனுதாரர் எதிர்மனுதாரருடன் ஒரு ஒப்பந்தம் செய்துகொண்டுள்ளார். இந்த ஒப்பந்தத்தின்படி, சுமார் 1250 சதுரடி அளவுள்ள நிலத்துடன் பீவானி, தொழிற் பகுதியில் செக்டார் 21, மனை எண் 90 இல் உள்ள நிலம் மற்றும்

தொழிற்சாலை வளாகத்தினை எதிர்மனுதாரர் மனுதாரருக்கு விற்க இசைந்துள்ளார். இந்த ஒப்பந்தத்தின் கீழ் நிர்ணயிக்கப்பட்ட மொத்த விற்பனைத் தொகை ரூ.4,38,000/–. அந்த ஒப்பந்தம் எழுதப்பட்ட காலத்தில் முன்பணமாக ரூ.1,00,000/– எதிர்மனுதாரருக்கு மனுதாரரால் தரப்பட்டுள்ளது. ஒப்பந்தத்தின் கீழ் ஒப்பந்த செயல்பாடு தேதி 7.10.1996 என நிர்ணயிக்கப்பட்டுள்ளது.

ii) ஏற்றதை ஆற்ற நிர்ணயிக்கப்பட்ட நாள் வந்தபோது, மனுதாரர் 12.11.1996 தேதியிட்ட சட்ட அறிவிப்பினை வழங்கி நடவடிக்கையை முடிக்க எதிர்மனுதாரரை அணுகியுள்ளார் மற்றும் அந்த நேரத்தில் விற்பனைப் பத்திரம் எழுதித்தர சில மூன்றாம் நபருடன் உள்ள வழக்குகள் நிலுவையிலிருப்பது தடையாக உள்ளதை எதிர்மனுதாரர் எதிரிவித்துள்ளார். எனவே, எதிர்மனுதாரர், அந்த சொல்லப்பட்ட சொத்து தொடர்பாக நிலுவையிலுள்ள எல்லா வழக்குகளின் விபரத்தைத் தரவும், வழக்கு ஏதும் நிலுவையில் இல்லையென்றால், 15 நாட்களுக்குள் விற்பனைப் பத்திரத்தை எழுதித் தர

எதிர்மனுதாரர் முன்வரவேண்டும் என்றும் சட்ட அறிவிப்பில் மனுதாரர் கோரியிருந்தார்.

iii) சட்ட அறிவிப்புக்கு எந்த எதிர்வினையும் இல்லாததால், பிவானி, முதுநிலை பிரிவு கூடுதல் உரிமையியல் நீதிமன்றத்தின் மனுதாரர் உரிமையியல் வழக்கான உ.வ. எண் 240/1999 ஐ தாக்கல் செய்துள்ளார். மீதமுள்ள விற்பனைத் தொகையைப் பெற்றுக்கொண்டு, பிரச்சினையில் உள்ள சொத்தினை மாற்றுவதற்கான எல்லா ஆவணங்களையும் எதிர்மனுதாரர் எழுதித்தர உத்தரவிடக் கோரி வலியுறுத்துக் கட்டளைக்காக வழக்கில் வேண்டுரைக்கப்பட்டது. வலியுறுத்துக் கட்டளைக்கான நிவாரணம் கோரி வழக்கு தாக்கல் செய்யப்பட்டுள்ளதால், மனுதாரர் வழக்கினை ரூ.250 என்றும் மட்டுமே மதிப்பீடு செய்து, நிர்ணயிக்கப்பட்ட கட்டணம் ரூ.25– செலுத்தி உள்ளார் என்பது இங்கு குறிப்பிடுவது பொருத்தமானதாக இருக்கும்.

iv) ஒப்பந்தம் எழுதிக்கொடுக்கப்பட்டது உட்பட எல்லாவற்றையும் மறுத்து எழுத்து மூல அறிக்கையை எதிர்மனுதாரர் தாக்கல் செய்துள்ளார். தாக்கல் செய்யப்பட்ட படிவத்தால் வழக்கின் நிலைக்கும் தன்மையையும்கூட அவர் வினவினார்.

எதிர்மனுதாரர், வழக்கு காலவரையறையினால் தடை செய்யப்பட்டுள்ளது என்று மேலும் கூறினார்.

v) வாதங்களின் அடிப்படையில், 12.10.2002 அன்று விசாரணை நீதிமன்றம் 8 பிரச்சினைகளை எழுப்பியுள்ளது. அந்த பிரச்சினைகள் பின்வருமாறு:

"i) வாதி வழக்குச் சொத்தினை எதிர்வாதியிடமிருந்து வழக்குச் சொத்தை ரூ.4,38,000/–க்கு வாங்க ஒப்புக்கொண்டுள்ளாரா மற்றும் 12.10.1994 அன்று கூறியவாறு முன்பணம் ரூ.1,00,000/– செலுத்தப்பட்டுள்ளதா? ஓ.பி.பி.

2) வேண்டுரைத்தபடி வலியுறுத்துக் கட்டளை நிவாரணத்திற்கு வாதி உரியவரா? ஓ.பி.பி.

3) வழக்கைத் தாக்கல் செய்ய வாதிக்கு வழக்குரையுரிமை உள்ளதா? ஓ.பி.பி.

4) வழக்கைத் தாக்கல் செய்ய வாதிக்கு வழக்கு மூலம் உள்ளதா? ஓ.பி.பி.

5) தற்போதை படிவத்தில் வழக்கு நிலைக்கத்தக்கதா ? ஓ.பி.பி.

6) வழக்கு தேவையான தரப்பினர்களை தவறாக சேர்த்தல் மற்றும் சேர்க்கத் தவறியதில் மோசமானதாக உள்ளதா? ஓ.பி.பி.

7) அவரது சொந்த செயல் மற்றும் நடத்தையில் வழக்கு தாக்கல் செய்வதில் வாதிக்கு முரண்தடை உள்ளதா? ஓ.பி.பி.

8) நிவாரணம்."

vi) எழுத்துமூல வாக்குமூலம் தாக்கல் செய்யப்பட்டபின், விற்பனை ஒப்பந்தத்தை ஏற்றதை ஆற்றுகை என வலியுறுத்த, வலியுறுத்துக் கட்டளைக்கான வழக்கு நிலைக்கத்தக்கதல்ல என்ற காரணத்தினால் வழக்கைத் தள்ளுபடி செய்யும்படி எதிர்மனுதாரர் மனு தாக்கல் செய்தார். வழக்கானது உண்மையிலேயே விற்பனை ஒப்பந்தத்தை ஏற்றதை ஆற்றுவதற்காகத்தான், மேலும் நிலைக்கத்தக்கது குறித்த தொழில்நுட்ப ஆட்சேபணையை தேவையான நீதிமன்றக் கட்டணத்தை மனுதாரர் / வாதி செலுத்த உத்தரவிட்டு சரிசெய்யலாம் எனமுடிவு செய்து விசாரணை நீதிமன்றம் 9.8.2003 தேதியிட்ட அசாதாரணமான உத்தரவு பிறப்பித்து அந்த

மனுவை முடிவு செய்துள்ளது அதன்படி, 8.9.2003 அன்று அல்லது அதற்கு முன்பு நீதிமன்றக் கட்டணத்தின் குறைபாட்டை ஈடுசெய்ய மனுதாரர்/வாதிக்கு விசாரணை நீதிமன்றம் உத்தரவிட்டது.

vii) துரதிஷ்டவசமாக, எதிர்மனுதாரர், 9.8.2003 தேதியிட்ட விசாரணை நீதிமன்றத்தின் மேற்சொன்ன உத்தரவை எதிர்க்கவில்லை. அதன் விளைவாக, குறைவாக உள்ள நீதிமன்றக் கட்டணத்தை மனுதாரர் /வாதி செலுத்தியுள்ளார் மற்றும் ஏற்றதை ஆற்றுகை என்பதற்கான ஒன்று என விசாரணை நீதிமன்றம் அந்த வழக்கினைக் கருதயுள்ளது.

Viii) அவ்விதம் முக்கியமான தடையை மேற்கொள்ள, விசாரணை நீதிமன்றம் அதனுடைய 3.2.2003 தேதியிட்ட உத்தரவின் மூலம் தீர்ப்பாணை வழங்கி, ஒருமாதத்திற்குள் மீதமுள்ள விற்பனைத் தொகையைச் செலுத்த உத்தரவும் எச்.யு.டி.ஏ–இடமிருந்து நேரடியாக மனுதாரர் பெயரில் வழக்குச் சொத்து மாற்றப்பட எதிர் மனுதாரருக்கு உத்தரவும் வழங்கியுள்ளது.

ix) இந்த தீர்ப்புரை மற்றும் தீர்ப்பாணையால் பாதிப்படைந்து, பிவானி, கூடுதல் மாவட்ட நீதிமன்றத்தில் முறையான

உரிமையியல் மேல்முறையீடு எண் 181 / 2006 ஐ எதிர்மனுதாரர் தாக்கல் செய்தார். 2.1.2013 தேதியிடப்பட்ட உத்தரவின்படி மேல்முறையீட்டினை மாவட்ட நீதிமன்றம் அனுமதித்து, கீழமை நீதிமன்றத்தின் உத்தரவை நீக்கறவு செய்தது, அதனால் வழக்கு தள்ளுபடி செய்யப்பட்டது.

x) முதலாம் மேல்முறையீட்டு நீதிமன்றத்தின் தீர்ப்புரையால் பாதிக்கப்பட்டு, மனுதாரர் சண்டிகரிலுள்ள பஞ்சாப் உறரியானா உயர் நீதிமன்றத்தில் ஆர்.எஸ்.ஏ.எண் 1244 / 2013 ஆன இரண்டாம் மேல்முறையீட்டை தாக்கல் செய்தார். 20.5.2016 தேதியிட்ட தீர்ப்புரையில் உயர் நீதிமன்றம் இரண்டாம் மேல்முறையீட்டினைத் தள்ளுபடி செய்தது. அந்த தீர்ப்புரை மற்றும் தீர்ப்பாணைக்கு எதிராக மனுதாரர் மேல்சொன்ன சிறப்பு அனுமதி மனு தாக்கல் செய்தார்.

4. மனுதாரர் சார்பாக ஆஜரான கற்றறிந்த முத்த வழக்குரைஞரின் வாதத்தின் முக்கிய ஆதாரம் யாதெனில், 9.8.2003 தேதியிட்ட உத்தரவால், ஏற்றதை ஆற்றுகை எனும் ஒன்றாக வலியுறுத்துக் கட்டளைக்கான வழக்காகக் கருத விசாரணை நீதிமன்றம் தேர்ந்தெடுத்துள்ளது, மேலும் குறைவாகயுள்ள நீதிமன்றக்

கட்டணத்தைச் செலுத்த மனுதாரர் / வாதிக்கு உத்தரவிட்டுள்ளது மற்றும் மனுதாரரும் கூட அந்த உத்தரவினை நிறைவேற்றினார். உரிமையியல் நடைமுறைச் சட்டம் பிரிவு 149 இன் காரணமாக அத்தகைய செலுத்துதல் முதலிலேயே அத்தகைய சட்டணம் செலுத்தப்பட்டதான அதே வலிமை மற்றும் விளைவாக இருக்கும் என வாதிடப்பட்டது. எனினும், உயர் நீதிமன்றம் அந்த வழக்கு காலவரையறையினால் தடை செய்யப்படுகிறது என முடிவு செய்தது. இது, மனுதாரரின் கற்றறிந்த வழக்குரைஞரின் கருத்துப்படி சட்டப் பிரிவு 149 இல் சட்டத்துக்குமுரணானது. வழக்கின் குறிப்பிட்ட சங்கதிகள் தொடர்பாக உயர் நீதிமன்றம், குறித்த வகை பரிகாரச் சட்டம், 1963, பிரிவு 16(சி)இன் விளைவு முறையான முன்னோக்குடன் பரிசீலிக்கப்படவில்லை, எனவே, உயர் நீதிமன்ற தீர்ப்புரை விழலாக்கப்படுகிறது.

5. மேற்சொன்ன வாதங்களை நாங்கள் கவனமாகப் பரிசீத்தோம். ஆவணத்தின் மீது உள்ளபடியே செலுத்தவேண்டிய முழுமையான அல்லது பகுதியான நீதிமன்றக் கட்டணத்தை எந்த நிலையிலும் ஒரு நபர் செலுத்துவதை அனுமதிக்க உ.வி.மு.ச., பிரிவு 149 நீதிமன்றத்திற்கு விருப்புரிமை வழங்கியுள்ளது என்பது உண்மைதான்.

எனினம் அது செலுத்தப்பட வில்லை. மேற்சொன்ன முடிவின்படி அத்தகைய விருப்புரிமை மற்றும் நீதிமன்றக் கட்டணம் செலுத்துதலை ஒருமுறை நீதிமன்றம் அதிகாரத்தை செலுத்திவிட்டால், பிரிவு 149 இன் கீழ், ஆவணம், அத்தகைய கட்டணம் முதலிலேயே செலுத்தப்பட்ட அதே வலிமையும் விளைவையும் கொண்டிருக்கும்.

6. எனினும் இவ்வழக்கின் காலவரையறை மட்டுமே வினாக்குரியதல்ல. நாங்கள் ஏற்கெனவே தெரிவித்தவாறு, வழக்கு விற்பனை ஒப்பந்தத்திற்கான நாள் 12.10.1994. மனுதாரரின் கருத்துப்படி, ஒப்ப்ந்தத்தின் கீழ் கடமையை செயல்படுத்துவதற்கான கடைசி நாள் 7.10.1996. மனுதாரரால் 12.11.1996 அன்று சட்ட அறிவிப்பு வழங்கப்பட்டது. ஆனால், வழக்கு 13.10.1999 அன்றுதான் தாக்கல் செய்யப்பட்டது, அது ஒப்பந்தத்தை நிறைவேற்ற விற்பனை ஒப்பந்தத்தின் கீழ் நிர்ணயிக்கப்பட்ட நாளான 7.10.1996 இலிருந்து மூன்றாண்டுகள் கழித்து உள்ளது (வழக்கு 03.10.1999 இல் தாக்கல் செய்யப்பட்டது என எங்கள் முன் மனதாரர் கோரினாலும், விசாரணை நீதிமன்றத்தின் தீர்ப்புரை அது போல் தீர்ப்பாணை 13.10.1999 தான் தாக்கல் செய்யப்பட்ட நாள் எனக் குறிப்பிடுகிறது). அது ஆரம்பத்தில் வைக்கப்பட்டவாறே, வாதுரையில் கோரப்பட்ட நிவாரணமானது

மீதமுள்ள விற்பனைத் தொகையை எதிர்மனுதாரர் பெற்றுக்கொள்ள வலியுறுத்துக் கட்டளை மற்றும் மனுதாரருக்குச் சாதகமாக மாறுதல் செய்து ஆவணம் பெறுவதுதான். மனுதாரர் / வாதி எவரால் கோரப்பட்ட நிவாரணத்தின் தன்மையை உள்ளபடியே அறிவார். இதனால் தான் வழக்கில் கோரப்பட்ட நிவாரணத்தை ரூ.250/– என மதிப்பிட்டு நிர்ணயிக்கப்பட்ட நீதிமன்றக் கட்டணம் ரூ.25/–ஐ செலுத்தியுள்ளார். அது தாக்கல் செய்யப்பட்ட படிவத்தில் வழக்கு நிலைக்கத்தக்கதுதானா என அவரது எழுத்து மூல வாக்குமூலத்தில் எதிர்மனுதாரர் ஆட்சேபனை எழுப்பியுள்ளார். எனவே, பிரச்சினை 5 ஆக, தற்போதைய படிவத்தில் வழக்கு நிலைக்கத்தக்கதல்லவா என்கிற பிரச்சினையை விசாரணை நீதிமன்றம் எழுப்பியுள்ளது. 12.10.2002 பிரச்சினைகள் எழுப்பப்பட்ட பின்ன விசாரணை நீதிமன்றம் எதிர்மனுதாரர் வழக்குத் தள்ளுபடிக்காக தாக்கல் செய்த மனுவை விசாரணைக்கு எடுத்துக்கொண்டது. அம்மனுவில், ஏற்றதை ஆற்றுக என்பதற்கான ஒன்றாக கருதி, குறைவாகயுள்ள நீதிமன்றக் கட்டணத்தை மனுதாரர் வாதியை செலுத்த அனுமதித்ததில் 9.8.2003 தேதியிட்ட உத்தரவை விசாரணை நீதிமன்றம் வழங்கியுள்ளது. விற்பனை ஒப்பந்தத்தை ஏற்றதை ஆற்றுகை என மறைமுகமாக

மனுதாரர் கோரமுடியுமா என்ற பிரச்சினையை தீர்க்காமல், வலியுத்துக்கட்டளை என நிவாணத்தை மறைத்தும், வலியுறுத்துக் கட்டளைக்காக வழக்கில் செலுத்தவேண்டிய நிர்ணயிக்கப்பட்ட நீதிமன்றக் கட்டணத்தை செலுத்தியும், நீதிமன்றம் தவறான வாதத்தால் ஏற்றதை ஆற்றுக என்பதற்கான வழக்காகக் கருத தேர்ந்தெடுத்து, மனுதாரர் குறைவான நீதிமன்றக் கட்டணம் செலுத்த அனுமதித்தது.

7. உண்மையில்லேயே, அந்த வழக்கு ஏற்றதை ஆற்றுகை என்பதற்கான ஒன்று என்றால், ஒப்பந்தத்தில் கூறப்பட்ட விற்பனைத் தொகையின் அடிப்படையிலாவது குறைந்தபட்சம் வழக்கினை மனுதாரர் மதிப்பிட்டிருக்கவேண்டும் . ஆனால் அவர் செய்யவில்லை. அந்த வழக்கு வலியுறுத்துக் கட்டளைக்கு மட்டுமே என்றால் (அது உள்ளபடியே அதுவானது) மனுதாரருக்கு உள்ள ஒரே வழி உரிமையியல் விசாரணைமுறைச் சட்டத்தின் கட்டளை VI விதி 17 இன் கீழ் திருத்தம் கோருவதேயாகும். அத்தகைய மனு தாக்கல் செய்யப்பட்டிருந்தால், அது காலவரையறையினால் தள்ளுபடி செய்யப்பட்டிருக்கும் (கே. ரஹேஜா கன்ஸ்ட்ரக்ஷன்ஸ் லிமிடெட் – எதிர்– அலையன்ஸ் மினிஸ்ட்ரீஸ், 1995 சப்ளி 1(3) எஸ்சிசி 17)

அல்லது அது அனுமதிக்கப்பட்டிருந்தாலும்கூட, திருத்தம் மூலம் நுழைக்கப்பட்ட வேண்டுதலான ஏற்றதை ஆற்றுகை என்பதற்கு, வாதுரையின் நாள்வரை பின்னால் ஒரு விஷயமாக எடுக்கப்பட்டிருக்காது (திர்லோக் சிங் –எதிர்– விஜய குமார் 1996 (8) எஸ்சிசி 367) , வான் விபாக் கரம்சாரி க்ருஹா நிர்மான் சகாரி சன்ஸ்தா மார்யாதித் –எதிர்– ரமேஷ் சந்தர் 2010 (14) எஸ்சிசி 596). எனவே, அவ்வாறாக வாதுரையைத் தக்கவைக்க மனுதாரர் / வாதியால் காணப்பட்ட ஒரு சுருக்கு வழியாகும். ஆனால், ஏற்றதை ஆற்றுக என்பதற்காகத்தான் முதலில் உள்ளபடியே தாக்கல் செய்யப்பட்டிருப்பதால், குறைவான நீதிமன்றக் கடடணத்தை செலுத்த அனுமதி கோரப்பட்டுள்ளது. குறித்தவகை பரிகாரச் சட்டம், 1963 பிரிவு 20 இன் கீழ் ஏற்றதை ஆற்றுகை என்கிற நிவாரணம் விருப்புரிமையாக இருப்பதால் ஏற்றதை ஆற்றுக என்பதற்கு குறிப்பாக வழக்கில் அத்தகைய சந்தேகமான அணுகுமுறை அனுமதிக்கப்பட்டிருக்கக்கூடாது.

8. காலவரையறையின் காரணமாக மனுதாரர் / வாதிக்குப் பொருத்தமற்று இருக்கும்போது, அசல் குறைபாட்டை சரி செய்யப்பட்டபோதிலும் , அது இறுதியாக்கப்பட்டுள்ளபோது, உயர்

நீதிமன்ற அணுகுமுறை தவறாக இருக்கலாம் என்பது உண்மையாக இருக்கலாம். ஆனால் அவர் குறிப்பாக வலியுறுத்துக் கட்டளைக்காக மட்டும் வழக்கை (விற்பனை ஒப்பந்தத்தின் கீழ் நிர்ணயிக்கப்பட்ட நாளிலிருந்து மூன்றாண்டுகளுக்கு மேல்) தக்கல் செய்து, அவ்வாறாக அதனை மதிப்பிட்டு, அதன்படி நீதிமன்றக் கட்டணம் செலுத்தி, வழக்கு தள்ளுபடி செய்வதற்கான விண்ணப்பம் எதிர்க்கப்பட்டதன்பேரில் கட்டணம் செலுத்த நினைத்து, உ.வி.மு.ச., பிரிவு 149 இன் படி தன்னை பாதுகாத்துக்கொள்ள மனுதாரர் மேல்கொள்ளும் சாதகமாக சூழ்நிலையை நாங்கள் அனுமதிக்க மாட்டோம். புத்திசாலித்தனம் எப்போதும் பயன் தராது.

9. பிரிவு 16(இ)ஐ சூழ்ந்திருக்கும் இரண்டாவது அம்சத்தை பரிசீலிக்கையில், விசாரணை நீதிமன்றத்தின் தீர்ப்புரையைப் பார்த்தோமென்றால், குறித்தவகை பரிகாரச் சட்டம் பிரிவு 16(இ)–இன் வரையறைகளின்படி மனுதாரர் / வாதி தரப்பில் தயார் நிலை மற்றும் விருப்பநிலையை குறித்த வினா தொடர்பாக பிரச்சினை எதுவும் எழுப்பப்படவில்லை என்பதைக் காட்டுகிறது. 12.11.96 தேதியிட்ட சட்ட அறிவிப்பு வெளியிட மனுதாரர் தேர்ந்தெடுத்த விடையமும், நடவடிக்கையும் முடிக்கும் காரணத்திற்காக, அதன் செயல்பாடுக்காக

குறிப்பிடப்பட்ட காலத்திற்குள் சார்பதிவாளர் முன்பு 7.10.1996 அன்று அவர் இருந்ததைக் காட்டுவதற்காக ஒரு உறுதி ஆவண வடிவில் (சான்றாவணம் பி 2 எனக் குறியிடப் பெற்றது) மனுதாரர் உருவாக்கிய விடையமும் வாதுரை தாக்கல் செய்தபோது 13.10.1999 அன்று மூன்றாண்டுகள் கழிந்த பின்னரும் மனுதாரர் தயாராகவும், விருப்பமுடையவராகவும் இருந்தார் என முடிவு செய்ய போதுமானதாக இல்லை. 12.11.1996 இல் சட்ட அறிவிப்பு வழங்கப்பட்ட பின்னர் வழக்கு தாக்கல் செய்ய (13.10.1999 அன்று) நீண்டகால தாமதமான மூன்றாண்டுகளுக்கு மனுதாரரிடமிருந்து எந்த விளக்கமும் வரவில்லை. ஏற்றதை ஆற்றுகை வழக்கில் வாதியின் நடவடிக்கை முக்கியமானதாகும். 12.11.1996 இல் சட்ட அறிவிப்பு வழங்கிய நபர், தயார் நிலையையும் விருப்பமும் கோரிய நிலையில் ஆனால் 13.10.1999 அன்று தான் வழக்கை பதிவு செய்துள்ளது, மேற்சொன்ன நிவாரணத்திற்கான தொடர்புடைய நிர்ணயிக்கப்பட்ட நீதிமன்றக் கட்டணத்தை உடைய வலியுறுத்துக் கட்டளைக்காக அதுவும் வேண்டுதல் வைப்பது ஏற்றதை ஆற்றுகைக்கான விருப்புரிமை நிவாரணத்திற்கு உரியதல்ல.

10. எனவே, முதல் மேல்முறையீடு நீதிமன்றம், விசாரணை நீதிமன்றத்தால் வழங்கப்பட்ட குறித்தவகை நிறைவேற்றுகைக்கான தீர்ப்பாணையை எதிர்மறையாக்கியது சரியே, மேலும் முதல் மேல்முறையீட்டு நீதிமன்றத்தின் தீர்ப்புரையை உயர் நீதிமன்றம் உறுதி செய்தது சரியே என்பது எங்களது ஆழ்ந்தாராய்ந்த கருத்து.

11. மேற்சொன்னவற்றை கருத்திற்கொண்டு பார்க்கையில், சிறப்பு அனுமதி மனு தள்ளுபடி செய்யப்படுகிறது. செலவுத்தொகை குறித்து உத்தரவு இல்லை.

சிறப்பு அனுமதி மனு தள்ளுபடி செய்யப்பட்டது.

<u>பொறுப்புத் துறப்பு</u>

"வட்டார மொழியில் மொழியாக்கம் செய்யப்பட்ட இத்தீர்ப்புரையானது, வழக்காடி, தன்னுடைய மொழியில் புரிந்துகொள்வதற்கும் பயன்படுத்திக் கொள்வதற்கும் உட்பட்டதேயன்றி, வேறெந்த நோக்கத்திற்காகவும் பயன்படுத்திக்கொள்ளலாகாது. அனைத்து நடைமுறையான மற்றும் அலுவல்முறையான நோக்கங்களுக்கும் மற்றும் தீர்ப்புரையை நிறைவேற்றலுக்கும், செயற்படுத்தலுக்கும் அதன் ஆங்கிலப் பதிப்பே அதிகாரப்பூர்வமானதாகும்."